# ஆரம்ப வாசகர்களுக்கு பரமசத்தியத்தில் பரவசம்

ஒக்டொம்பர்
2026




## Chris Oyakhilome


ஆரம்ப
வாசகர்களுக்கு
பரமசத்தியத்தில்
பரவசம்

# ஐஎஸ்எஸ்என் 1596-6984
# ஒக்டொம்பர் 2026



அனைத்து உரிமைகளும் சர்வதேச பதிப்புரிமை சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்டவை.

லவ் வேர்ல்ட் பதிப்பகத்தின் உத்தரவு இல்லாமல் பொருளடக்கம் மற்றும் அட்டையை மொத்தமாகவோ ஒரு பகுதியையோ மறு ஆக்கம் செய்ய கூடாது.


வேறுவிதமாகக் குறிப்பிடப்படாவிட்டால், அனைத்து வேத வசனங்களும் மற்ற ஊக்கமான அம்சங்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து எடுக்கப்பட்டவை.


**யுனைடெட் கிங்டம்:**
Unit C2, Thames View Business Centre, Barlow Way Rainham
Essex, RM13 8BT.
Tel.: +44 (0)1708 556 604
+44 (0) 8001 310 604

**யு எஸ் ஏ:**
Loveworld Publishing USA,
28, Prestige Circle,
Suite 1100,
Allen TX 75002.
Tel.: +1 (469) 656-1284
+1 (800) 620-8522

**கன்னடா:**
4101 Steeles Ave. West.
Suite 204 Toronto, Ontario
Canada M3N 1V7.
Tel.: +1 416 667 9191

**தெற்கு ஆப்ரிகா:**
303 Pretoria Avenue
Cnr. Harley and Braam Fischer,
Randburg, Gauteng 2194
South Africa.
Tel.: +27 11 326 0971

**நைஜீரியா:**
Plot 105, Chris Oyakhilome Crescent, Durumi,
Abuja, Nigeria.

22/23 Billingsway Road,
Oregun, Ikeja, Lagos.
P.O. Box 13563 Ikeja, Lagos.
Tel.: +234 201 8888186
+234 201 3300 102


**மற்ற மொழிபெயர்ப்புகளுக்கான குறிப்புகள்**
EVR-TA - படிக்க சுலபமான பதிப்பு-தமிழ்
GW - தேவனின் வார்த்தை
CEV - தற்கால ஆங்கில பதிப்பு
TLB - ஜீவிக்கும் வேதாகமம்
NLT - புதிய வாழ்க்கை மொழிபெயற்பு


***இணையதளம்:***
***www.kiddiesloveworld.com***

***மின்னஞ்சல்:***
***info@kiddiesloveworld.com***



***பதிப்புரிமை © 2025 லவ் வேர்ல்ட் பதிப்பகம்***







# உள்ளடக்கங்கள்


தியானங்கள்
பக்கங்கள் 6-17

வேதாகமம் உண்மைகள்
பக்கங்கள் 18-19

தியானங்கள்
பக்கங்கள் 20-31

போட்டிகளும் விளையாட்டுகளும்
பக்கங்கள் 32-33

தியானங்கள்
பக்கங்கள் 34-39

போட்டிகளும் விளையாட்டுகளும்
பக்கங்கள் 40-41

சிறு குறிப்புகள்
பக்கங்கள் 42-43

பதில்கள்
பக்கங்கள் 44-46

இரட்சிப்பின் ஜெபம்
பக்கம் 48



வயது:

பெயர்:

# ஒக்டொம்பர்

## மாதத்திற்க்கு வரவேற்கிறோம்!



ஹலோ! உங்களின் பிரியமான தியானம், **ஆரம்ப வாசகர்களுக்கு பரமசத்தியத்தில் பரவசத்துடன்** இந்த அற்புதமான மாதத்திற்கு வரவேற்கிறோம்! இதில் உள்ள ஊக்கமளிக்கும் செய்திகளுடன் நீங்கள் அருமையான நேரத்தைக் கழித்து வருகிறீர்கள் என்று நான் நம்புகிறேன்.

இந்த இதழில், **"தேவன் உங்கள் இருதயத்தைப் பார்க்கிறார்!"**, **"நீங்கள் பிரகாசிக்கும் நேரம் இது!"**, **"நீங்கள் ஜெயிப்பதற்காகவே பிறந்தவர்கள்!"**, **"நீங்கள் தேவனுடைய ஆலயம்!"** போன்ற பல சுவாரசியமான கட்டுரைகளும் இன்னும் பல காரியங்களும் நிறைந்துள்ளன.

மேலும் என்ன? உங்களுக்காக மகிழ்ச்சியும் விறுவிறுப்பும் நிறைந்த விளையாட்டுகளும் புதிர்களும் இதில் உள்ளன. **"சுவிசேஷத்தைப் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியவை - பகுதி 3B"** என்ற தலைப்பில் சிறப்புத் துணுக்குகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் சிறுவர்களுக்கான உங்கள் ஏவுதலளிக்கும் தினசரி தியானப் புத்தகமான **ஆரம்ப வாசகர்களுக்கு பரமசத்தியத்தில் பரவசத்துடன்** பதிப்பில் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு கட்டுரையின் முடிவிலும் உள்ள அறிக்கைகளையும் ஜெபங்களையும் சொல்ல நினைவில் கொள்ளுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

பாஸ்டர் கிறிஸ் அவர்களின் மேலும் பல ஏவுதலளிக்கும் போதனைகளை அனுபவிக்க கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள்.

வியாழன்
1

# நன்மை செய்ய மனமுள்ளவர்களாக இருங்கள்

## கலாத்தியர் 6:9

நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்.



தேவன் நீங்கள் தயவுள்ளவர்களாகவும், மற்றவர்களுக்கு உதவ ஆயத்தமாகவும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். யாராவது உங்களிடம் தயவில்லாமல் நடந்துகொண்டாலும், நன்மை செய்வதை நிறுத்தாதீர்கள். நீங்கள் சரியானதைத் தொடர்ந்து தேர்ந்தெடுக்கும்போது தேவன் பிரியப்படுகிறார்.

இயேசு "நல்ல சமாரியனைப் பற்றிய" ஓர் உவமையைச் சொன்னார் (லூக்கா 10:30-37). ஒரு மனிதன் காயம்பட்டு வழியில் விடப்பட்டான். சிலர் அவனைக் பார்த்தும் கடந்து சென்றனர். ஆனால் சமாரியனோ நின்று, அவனைக் கவனித்து, அவன் பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்தான்.

நீங்களும் அதையே செய்யலாம். தயவோடு இருங்கள், பகிர்ந்துகொள்ளுங்கள், தினமும் மற்றவர்களுக்கு உதவுங்கள். தொடர்ந்து நன்மை செய்யுங்கள்—தேவன் அதைப் பார்க்கிறார், உங்களுக் கான பலன் நிச்சயமாக வரும்.

## வேத வாசிப்பு எபிரெயர் 13:16

### ஜெபிப்போம்

அன்புள்ள பரலோகப் பிதாவே, என்னை ஆசீர்வதித்து, என்னை மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக மாற்றியதற்காக உமக்கு நன்றி. இயேசுவின் நாமத்தில், நான் தயவுள்ளவனாகவும் தினமும் மற்றவர்களுக்கு உதவ ஆயத்தமாகவும் இருக்கிறேன். ஆமென்.

வெள்ளிக்கிழமை

2

# தேவனின் வார்த்தையைப் பேசுங்கள்

ஏசாயா 55:11

அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.



ஒரு நாள், இயேசு புயலைப் பார்த்து, "இரையாதே, அமர்ந்திரு" என்றார்; புயலும் ஓய்ந்தது (மாற்கு 4:39). அவருடைய வார்த்தைகள் எவ்வளவு வல்லமையுள்ளவை என்பதை இது காட்டுகிறது.

நல்ல செய்தி என்னவென்றால், நீங்கள் மறுபடியும் பிறந்தபோது, தேவனுடைய வார்த்தையினாலே பிறந்தீர்கள் (1 பேதுரு 1:23). மேலும் இயேசு, "என் வார்த்தைகள் உங்களில் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" என்றும் கூறினார் (யோவான் 15:7).

அதன் அர்த்தம் என்னவென்றால், நீங்கள் தேவனுடைய வார்த்தையைப் பேசும்போது, அது அவருடைய வல்லமையைச் சுமந்து செல்கிறது. தேவனுடைய வார்த்தையைப் பேசுவதன் மூலம் நீங்கள் பெரிய காரியங்களை நிகழச் செய்ய முடியும். எனவே, நீங்கள் சவால்களை எதிர்கொள்ளும்போது, மௌனமாக இருக்காதீர்கள். விசுவாசத்தோடு அவருடைய வார்த்தையைப் பேசுங்கள், உங்கள் வாழ்க்கையில் அமைதி, வெற்றி மற்றும் மகிழ்ச்சியை அனுபவிப்பீர்கள்.

நலமான சிறுவர் த்தகங்களை இன்னும் கண்டறிய ஸ்கேன் செய்யுங்கள்!

**வேத வாசிப்பு: 2 கொரிந்தியர் 4:13**

நான் விசுவாசத்தோடு தேவனுடைய வார்த்தையைப் பேசுகிறேன், அது என் வாழ்க்கையில் கிரியை செய்கிறது. நான் தினமும் அமைதி, வெற்றி மற்றும் மகிழ்ச்சியை அனுபவிக்கிறேன். அல்லேலூயா!

இதை சொல்லுங்கள்

சனிக்கிழமை

3

# சமாதானத்தின் தேவன்

## ரோமர் 15:33

சமாதானத்தின் தேவன் உங்கள் அனைவரோடும் கூட இருப்பாராக. ஆமென்.



இன்றைய மனப்பாட வசனம் ஆண்டவரை "சமாதானத்தின் தேவன்" என்று அழைக்கிறது. இயேசு பிறந்தபோது, தேவதூதர்கள், "பூமியிலே சமாதானமும், மனிதர்மேல் பிரியமும் உண்டாவதாக" என்று அறிவித்தார்கள் (லூக்கா 2:14). இது உலகத்திற்கான தேவனுடைய திட்டம் சமாதானமே என்பதைக் காட்டுகிறது.

இயேசு, "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்" என்றார் (யோவான் 14:27). அவருடைய சமாதானம் உலகத்தின் சமாதானத்தைப் போன்றது அல்ல—அது அவரிடமிருந்து வந்து உங்களுக்குள் வாழ்கிறது.

அதனால்தான் வேதாகமம் நாம் எல்லாரையும் பொருட்டு ஜெபம் செய்ய வேண்டும் என்று சொல்கிறது (1 தீமோத்தேயு 2:1–2). நீங்கள் ஜெபிக்கும்போது, தேவனுடைய சமாதானத்தை உங்கள் உலகில் விடுவிக்கிறீர்கள். எனவே, தினமும் உங்கள் குடும்பம், பள்ளி, நகரம் மற்றும் தேசத்தின் மீது சமாதானத்தைப் பேசுங்கள்.

**வேத வாசிப்பு: 1 தீமோத்தேயு 2:1-2**

**ஜெபிப்போம்**

அன்புள்ள பரலோகப் பிதாவே, உமது சமாதானத்திற்காக உமக்கு நன்றி. உலக தேசங்களில் உமது சமாதானம் எங்கும் ஆளுகை செய்ய வேண்டும் என்று ஜெபிக்கிறேன். நகரங்கள், சமுதாயங்கள், பள்ளிகள் மற்றும் குடும்பங்களின் மீது சமாதானத்தை அறிவிக்கிறேன். உமது சமாதானம் மேலோங்குகிறது, இயேசுவின் நாமத்தில். ஆமென்.

ஞாயிறு

4

# தேவன் உங்கள் இருதயத்தைப் பார்க்கிறார்

## 1 சாமுவேல் 16:7

...மனுஷன் பார்க்கிறபடி கர்த்தர் பாரார்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறான்.



தேவனுடைய பிள்ளையாக, உங்கள் இருதயத்தில் என்ன இருக்கிறது என்பது தேவனுக்கு மிக முக்கியமானது. அதனால்தான் உண்மையுள்ளவை, கற்புள்ளவை, மற்றும் நல்லவை எவையோ அவைகளையே நம் சிந்தனையில் நிரப்ப வேண்டும் என்று வேதாகமம் நமக்குக் கூறுகிறது (பிலிப்பியர் 4:8). வேதாகமத்தில், காயீன் தன் சகோதரனான ஆபேலின் மேல் கோபமும் பொறாமையும் கொண்டான். சரியானதைத் தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக, அந்த தவறான எண்ணங்களைத் தன் இருதயத்தில் வளர அனுமதித்தான். தேவன் அவனைத் திருத்தியபோதும், அவன் செவிகொடுக்க மறுத்தான், அது அவனை ஒரு பெரிய தவறான காரியத்தைச் செய்ய வழிநடத்தியது (ஆதியாகமம் 4:3–8).

இது நமக்கு ஒரு முக்கியமான பாடத்தைக் கற்பிக்கிறது. உங்கள் இருதயத்தை நல்ல எண்ணங்களால் நிரப்புங்கள், மேலும் தினமும் தேவனுக்குப் பிரியமானதைத் தேர்ந்தெடுங்கள்.

**வேத வாசிப்பு: 1 நாளாகமம் 28:9**

**ஜெபிப்போம்**

**அன்பான பிதாவே, உமது வார்த்தைக்காக உமக்கு நன்றி. என் இருதயமும் சிந்தனையும் உமது வார்த்தையின் மீது நிலைத்திருக்கின்றன, மேலும் நான் தினமும் உமக்குப்பிரியமானதைத் தேர்ந்தெடுக்கிறேன், இயேசுவின் நாமத்தில். ஆமென்.**

திங்கள் 5

# தேவனுடைய வார்த்தை உங்களை வழிநடத்துகிறது

## 2 தீமோத்தேயு 3:16

வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது;... அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது...



வேதாகமம் என்பது வெறும் சாதாரணப் புத்தகமோ அல்லது கதைப்புத்தகமோ அல்ல. அது உங்களை வழிநடத்துவதற்காகக் கொடுக்கப்பட்ட தேவனுடைய வார்த்தையாகும். அனைத்து வேதவாக்கியங்களும் தேவ ஆவியினால் அருளப்பட்டது என்று வேதாகமம் கூறுகிறது. இதன் அர்த்தம் என்னவென்றால், நாம் அவருடைய சத்தியத்தை அறிந்துகொள்வதற்காக, இதை எழுதியவர்களை அவரே வழிநடத்தினார்.

நீங்கள் தேவனுடைய வார்த்தையைப் படித்துத் தியானிக்கும்போது, எது சரியானது என்பதையும் எவ்வாறு வாழ வேண்டும் என்பதையும் கற்றுக்கொள்கிறீர்கள். அது உங்களுக்குக் கற்பிக்கிறது, உங்களைத் திருத்துகிறது, மேலும் நீங்கள் ஒவ்வொரு நாளும் வளர உதவுகிறது.

எனவே எப்போதும் தேவனுடைய வார்த்தையை நம்புங்கள், அது உங்கள் வாழ்க்கையை வழிநடத்த அனுமதியுங்கள். அது உங்கள் கால்களுக்குத் தீபமும், உங்கள் பாதைக்கு வெளிச்சமுமாய் இருக்கிறது (சங்கீதம் 119:105).

**வேத வாசிப்பு: சங்கீதம் 119:105**

**ஜெபிப்போம்**

**அன்புள்ள உண்மையுள்ள பிதாவே, உமது வார்த்தைக்காக உமக்கு நன்றி. அது என்னை வழிநடத்துகிறது, எனக்குக் கற்பிக்கிறது, மேலும் தினமும் சரியாக வாழ எனக்கு உதவுகிறது, இயேசுவின் நாமத்தில். ஆமென்.**

செவ்வாய்

# 6

# ஜெபிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்

## லூக்கா 11:1

அவர் ஒரு இடத்தில் ஜெபம் பண்ணி முடித்தபின்பு... அவருடைய சீஷரில் ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே... எங்களுக்கு ஜெபம் பண்ணப் போதிக்க வேண்டும் என்றான்.



இயேசு அடிக்கடி ஜெபத்தில் நேரத்தைச் செலவிட்டார். தான் கேட்கப்படுகிறோம் என்பதை அறிந்து, விசுவாசத்தோடு பிதாவோடு பேசினார். அவருடைய சீஷர்கள் இதைக் கவனித்தார்கள். இயேசு வழக்கமாக ஜெபிப்பதையும், அவருடைய ஜெபங்கள் மாற்றங்களை உண்டாக்குவதையும் அவர்கள் கண்டார்கள். எனவே, ஒரு நாள் அவர்கள் அவரிடம், "...ஆண்டவரே, எங்களுக்கு ஜெபம் பண்ணப் போதிக்க வேண்டும்..." என்று கேட்டார்கள் (லூக்கா 11:1). தேவனிடம் சரியான வழியில் எப்படிப் பேசுவது என்பதை அவர்கள் கற்றுக்கொள்ள விரும்பினார்கள்.

நீங்களும் இயேசுவைப் போல ஜெபிக்க முடியும். நீங்கள் தேவனிடம் விசுவாசத்துடனும் நம்பிக்கையுடனும் ஜெபிக்கும்போது, உங்கள் ஜெபங்கள் மாற்றங்களை உருவாக்குகின்றன. அவை உங்கள் வாழ்க்கைக்கும், உங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கும் மாற்றங்களையும் ஆசீர்வாதங்களையும் கிருபையையும் கொண்டு வருகின்றன.

**வேத வாசிப்பு-மாற்கு 11:24**

**ஜெபிப்போம்**

என் ஜெபங்கள் வல்லமையும் பயனுள்ளவையுமாய் இருக்கின்றன. நான் விசுவாசத்தோடு ஜெபிக்கும்போது, என் வாழ்க்கையிலும் மற்றவர்களின் வாழ்க்கையிலும் பதில்களையும் நேர்மறையான மாற்றங்களையும் காண்கிறேன், இயேசுவின் நாமத்தில். ஆமென்.

புதன்

# 7

# தேவனுடைய ஜீவன் உங்களுக்குள் இருக்கிறது

## மாற்கு 16:18

…சாவுக்குறேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது…



தேவனுடைய பிள்ளையாக, அவருடைய ஜீவன் உங்களுக்குள் இருக்கிறது. அதன் அர்த்தம் நீங்கள் ஆதரவற்றவர்கள் அல்ல—உங்களைப் பாதுகாக்கவும் பலப்படுத்தவும் தேவனுடைய வல்லமை உங்களுக்குள் கிரியை செய்கிறது.

தேவனுடைய பிள்ளைகள் சாவுக்கு ஏதுவான யாதொன்றைக் குடித்தாலும், அது அவர்களைச் சேதப்படுத்தாது என்று இயேசு கூறினார் (மாற்கு 16:17-18). தீமை விளைவிக்கும் எதையும் விட தேவனுடைய வல்லமை பெரியது என்பதை இது காட்டுகிறது.

அப்போஸ்தலனாகிய பவுலை ஒரு விஷப்பாம்பு கடித்தபோது இதை நிரூபித்தார். மக்கள் அவர் நோய்வாய்ப்படுவார் என்று எதிர்பார்த்தார்கள், ஆனால் அவரோ அதை உதறிப்போட்டார், அவருக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை (அப்போஸ்தலர் 28:3–6).

எனவே பயப்படாதீர்கள். பரிசுத்த ஆவியானவர் உங்களுடனும் உங்களுக்குள்ளும் இருக்கிறார். அவர் உங்களைப் பாதுகாத்து, பலமாகவும், ஆரோக்கியமாகவும், ஜீவன் நிறைந்தவராகவும் வாழ உதவுகிறார்.

**வேத வாசிப்பு: லூக்கா 10:19**

**தேவனுடைய ஜீவன் எனக்குள் இருக்கிறது; எனவே, எந்த நோயோ, பலவீனமோ, வலியோ என்னை மேற்கொள்ள முடியாது. நான் ஆரோக்கியமாகவும், பலமாகவும், ஜீவன் நிறைந்தவனாகவும் (ஜீவன் நிறைந்தவளாகவும்) இருக்கிறேன். அல்லேலூயா!**

**இதை சொல்லுங்கள்**

வியாழன்

8

# ஆவியிலே ஜெபியுங்கள்

யூதா 1:20

நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணி...



பெந்தெகொஸ்தே நாளில் ஒரு அற்புதமான காரியம் நடந்தது. இயேசுவின் சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, ஆவியானவர் தந்தருளின வரத்தின்படியே வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள் (அப்போஸ்தலர் 2:2-4). இந்த ஈவு அவர்களுக்காக மட்டுமல்ல—இது நீங்கள் உட்பட தேவனுடைய பிள்ளைகள் அனைவருக்கும் உரியது.

நீங்கள் அந்நிய பாஷைகளில் ஜெபிக்கும்போது, உங்கள் புத்திக்கு அப்பாற்பட்டு ஜெபிக்க பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு உதவுகிறார். அதன் அர்த்தம் உங்களுக்குப் புரியவில்லை என்றாலும், தேவனுக்குப் புரியும். நீங்கள் இவ்வழியில் ஜெபிக்கும்போது, பலமடைந்து, மகிழ்ச்சியும் விசுவாசமும் நிறைந்தவர்களாக மாறுவீர்கள்.

எனவே, எப்போதும்—எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் ஆவியிலே ஜெபியுங்கள். நீங்கள் அப்படி செய்யும்போது, அதிக பலமடைந்து, தேவனுடைய சத்தத்தை இன்னும் தெளிவாகக் கேட்பீர்கள்.

**வேத வாசிப்பு: 1 கொரிந்தியர் 14:14-15**

**அன்பான பிதாவே, அந்நிய பாஷைகளில் பேசும் ஈவை எனக்குத் தந்ததற்காக உமக்கு நன்றி. நான் ஆவியிலே ஜெபிக்கும்போது, நான் பலப்படுத்தப்படுகிறேன், மேலும் வெற்றியில் நடக்கிறேன், இயேசுவின் நாமத்தில். ஆமென்.**

**ஜெபிப்போம்**

வெள்ளிக்கிழமை

# 9

# இயேசுவே ஒரே வழி

## யோவான் 14:6

...நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்; என் மூலமாயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.



வேதாகமம் இயேசுவே தேவனிடம் செல்வதற்கான ஒரே வழி என்று கற்பிக்கிறது. இதன் அர்த்தம் என்னவென்றால், நாம் இரட்சிப்பையும் நித்திய ஜீவனையும் அவர் மூலம் மட்டுமே பெறுகிறோம். நாம் இரட்சிக்கப்படுவதற்கு வேறொரு நாமமும் கொடுக்கப்படவில்லை (அப்போஸ்தலர் 4:12).

இயேசு நமக்கு நித்திய ஜீவனை, தெய்வீக வாழ்வைக் கொடுக்க வந்தார். தம்மில் விசுவாசம் உள்ளவர்கள் ஒருபோதும் கெட்டுப்போவதில்லை என்று அவர் கூறினார் (யோவான் 10:28). அதனால்தான் இயேசுவைப் பற்றி மற்றவர்களுக்குச் சொல்வது மிகவும் முக்கியம்.

வேதாகமத்தில், பேதுரு தைரியமாக இயேசுவைப் பற்றிப் பிரசங்கித்தார், மேலும் அநேக மக்கள் விசுவாசித்து இரட்சிக்கப்பட்டார்கள் (அப்போஸ்தலர் 2:38-41). நீங்களும் அதையே செய்யலாம். நற்செய்தியைப் பகிர்ந்து, மற்றவர்கள் தேவனுடைய குடும்பத்தில் இணைய உதவுங்கள்.

**வேத வாசிப்பு: 2 கொரிந்தியர் 5:18-19**

**ஜெபிப்போம்**

**தேவனுடைய அன்பைப் பற்றிப் பேசாமல் அமைதியாக இருக்க மாட்டேன். இயேசுவின் நற்செய்தியைத் தைரியமாகப் பகிர்ந்து, அநேக மக்கள் தேவனுடைய குடும்பத்தில் இணைய உதவுவேன், இயேசுவின் நாமத்தில். ஆமென்.**

சனிக்கிழமை

10

# உங்கள் இருதயத்திலிருந்து ஆராதியுங்கள்

## யோவான் 4:23

உண்மையாய் ஆராதிக்கிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கும் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது...



சில நேரங்களில் ஒரு பாடல் உங்களை உற்சாகப்படுத்தலாம், ஆனால் உற்சாகம் மட்டுமே உண்மையான ஆராதனை அல்ல. உண்மையான ஆராதனை என்பது உங்கள் இருதயம் தேவனை நோக்கியதாக இருக்கும்போதும், உங்கள் வார்த்தைகளால் அவரை மகிமைப்படுத்தும்போதும் நிகழ்கிறது.

கிணற்றருகே இருந்த ஸ்திரீயிடம் பேசியபோது இயேசு இதை விளக்கினார். உண்மையான ஆராதனைக்காரர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிப்பார்கள் என்றார் (யோவான் 4:23–24). இதன் அர்த்தம் உங்கள் ஆராதனை உங்கள் இருதயத்திலிருந்து உண்மையாய் வர வேண்டும் என்பதாகும்.

எனவே, நீங்கள் பாடும்போதும் ஜெபிக்கும்போதும் தேவனுடைய நன்மைத்தனம், அன்பு மற்றும் மகத்துவத்தைப் பற்றிச் சிந்தியுங்கள். அவரை உண்மையோடு ஆராதியுங்கள், உங்கள் வாழ்க்கை அவருடைய அன்பை தினமும் வெளிப்படுத்தும்.

**வேத வாசிப்பு: பிலிப்பியர் 3:3**

**கிருபையுள்ள பிதாவே, உம்மை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கும் வாய்ப்பிற்காக உமக்கு நன்றி. என் முழு இருதயத்தோடும் உம்மை ஆராதித்து, எப்போதும் உமது நாமத்தை மகிமைப்படுத்துகிறேன். ஆமென்.**

**இதை சொல்லுங்கள்**

ஞாயிறு
11

# நீங்கள் பிரகாசிக்கும் நேரம் இது

## மத்தேயு 5:14

"நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாய் இருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது."



தேவன் உங்களை இந்த உலகத்தில் தம்முடைய வெளிச்சமாக மாற்றியிருக்கிறார். வெளிச்சம் பிரகாசித்து இருளை அகற்றும். எனவே காரியங்கள் பயமுறுத்துவதாகவோ அல்லது குழப்பமாகவோ தோன்றினாலும், நீங்கள் பயப்பட வேண்டியதில்லை—பிரகாசியுங்கள், ஏனென்றால் நீங்கள் தேவனுடைய வெளிச்சமாய் இருக்கிறீர்கள்!

"எழும்பிப் பிரகாசி; உன் வெளிச்சம் வந்தது..." என்று வேதாகமம் கூறுகிறது (ஏசாயா 60:1). இதன் அர்த்தம் நீங்கள் பிரகாசிக்கும் நேரம் இது என்பதாகும். நீங்கள் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து, சரியானதைச் செய்து, தயவைக் காண்பிக்கும்போது, இன்னும் அதிகமாகப் பிரகாசிக்கிறீர்கள்.

மக்கள் உங்களிடத்தில் இயேசுவைக் காண்பார்கள், அவரைப் பற்றி அறிந்துகொள்வார்கள். எனவே, தைரியமாக இருங்கள், நீங்கள் செல்லும் இடமெல்லாம் உங்கள் வார்த்தைகளும் செயல்களும் அவருடைய அன்பைக் காட்டட்டும்.

**வேத வாசிப்பு: ஏசாயா 60:1-3**

**இதை சோல்லுங்கள்**

**நான் உலகத்திற்கு வெளிச்சமாய் இருக்கிறேன். தேவனுடைய மகிமை எனக்குள்ளும் என் மூலமாகவும் காணப்படுகிறது. என் பள்ளிக்கும், குடும்பத்திற்கும், சமுதாயத்திற்கும் நான் நம்பிக்கையையும், சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் கொண்டு வருகிறேன். அல்லேலூயா!**

திங்கள்

12

# தேவனுக்குப் பரிசுத்தம்பண்ணப்பட்டவர்கள்

## 1 பேதுரு 2:9

நீங்களோ... தேர்ந்தெடுக்கப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்...



பரிசுத்தம்பண்ணப்படுவது என்றால் தேவனுக்கென்று விசேஷமாகப் பிரித்தெடுக்கப்படுவதாகும். பழைய ஏற்பாட்டில், ஆரோனும் அவனுடைய குமாரர்களும் ஆசாரியர்களாக தேவனுக்கு ஊழியஞ்செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பிரித்தெடுக்கப்பட்டார்கள் (எண்ணாகமம் 3:3). ஆனால் இன்று, தேவனுடைய ஒவ்வொரு பிள்ளையும் தேவனுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பிரித்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.
இதன் அர்த்தம் நீங்கள் தேவனுக்குச் சொந்தமானவர்கள் மற்றும் அவருக்கு விசேஷமானவர்கள். நீங்கள் உலகத்தில் உள்ள மற்றவர்களைப் போல் இல்லை. எனவே தேவனுக்குச் சொந்தமான ஒருவரைப் போல வாழுங்கள்—சரியானதைச் செய்யுங்கள், சத்தியத்தைப் பேசுங்கள், அன்பைக் காட்டுங்கள். நீங்கள் யார் என்பதை எப்போதும் நினைவில் வையுங்கள், தேவன் உங்களுக்குத் தந்திருக்கும் மகிழ்ச்சி, ஆரோக்கியம் மற்றும் வெற்றி நிறைந்த வாழ்க்கையை அனுபவியுங்கள்.

### வேத வாசிப்பு: வெளிப்படுத்தின

**அன்புள்ள பிதாவே, உமது மகிமைக்காக என்னை விசேஷமாகப் பிரித்தெடுத்ததற்காக உமக்கு நன்றி. நான் உமக்குச் சொந்தமானவன், மேலும் தினமும் உமக்குப்பிரியமானதைச் செய்ய வாழ்கிறேன். ஆமென்.**

**இதை சொல்லுங்கள்**

# மனத்தாழ்மை

குறித்த

## வேதாகமச் சத்தியங்கள்

1. இயேசுவே மனத்தாழ்மைக்கு நம்முடைய சிறந்த மாதிரி: "அவர் தம்மைத் தாழ்த்தி, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவரானார்" (பிலிப்பியர் 2:8).

2. தேவன் மனத்தாழ்மையுள்ளவர்களை நேசிக்கிறார்: "தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்" (யாக்கோபு 4:6).

3. மனத்தாழ்மை என்பது மற்றவர்களுக்கு முதலிடம் கொடுப்பதாகும்: "ஒன்றையும் வம்பினாலும் வீண் பெருமையினாலும் செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையாக எண்ணக்கடவீர்கள்" (பிலிப்பியர் 2:3).

4. தேவன் மனத்தாழ்மையுள்ளவர்களை உயர்த்துகிறார்: "ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" (1 பேதுரு 5:6).

5. தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்: "தன்னை உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் எவனும் உயர்த்தப்படுவான்" (மத்தேயு 23:12).

# மனத்தாழ்மை



6. மனத்தாழ்மை ஞானத்தைக் கொண்டுவருகிறது: "அகந்தை வந்தால் இலச்சையும் வரும்; தாழ்ந்த சிந்தையுள்ளவர்களிடத்தில் ஞானம் உண்டு" (நீதிமொழிகள் 11:2).

7. மனத்தாழ்மை ஆசீர்வாதங்களையும் கனத்தையும் கொண்டுவருகிறது: "மனத்தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம்" (நீதிமொழிகள் 22:4).

8. மனத்தாழ்மையுள்ளவர்கள் எப்போதும் கற்றுக்கொள்ள விருப்பமுள்ளவர்களாயிருப்பார்கள்: "கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத்தைப் போதிக்கும்; மேன்மைக்கு முன்னே தாழ்மை உண்டு" (நீதிமொழிகள் 15:33).

9. தேவன் மனத்தாழ்மையுள்ளவர்களை வழிநடத்துகிறார்: "அவர் சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்தகுணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்" (சங்கீதம் 25:9).

10. தேவன் மனத்தாழ்மையுள்ள ஜெபங்களைக் கேட்கிறார்: "என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி... பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு..." (2 நாளாகமம் 7:14).

செவ்வாய்
13

# நீங்கள் தேவனுடைய பிள்ளை

## 1 யோவான் 4:4

பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து... ஏனென்றால் உலகத்தில் இருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்.



நீங்கள் மறுபடியும் பிறந்த அந்த நிமிடமே, தேவன் உங்கள் பிதாவானார், நீங்கள் அவருடைய பிள்ளையானீர்கள். அது உங்களை விசேஷமானவர்களாகவும், வித்தியாசமானவர்களாகவும், அவருடைய ஜீவன் நிறைந்தவர்களாகவும் மாற்றுகிறது.

தான் தேவனிடமிருந்து வந்தவர் என்பதை இயேசு அறிந்திருந்தார், அதனால் அவர் நம்பிக்கையோடு பேசினார், செயல்பட்டார் (யோவான் 6:38). அதே வழியில், நீங்கள் எங்கிருந்து வந்தீர்கள் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்—தேவனிடமிருந்து!

நீங்கள் உன்னதமானவருடைய பிள்ளைகள் என்று வேதாகமம் கூறுகிறது (சங்கீதம் 82:6). எனவே தேவனுடைய பிள்ளையைப் போலப் பேசுங்கள், செயல்படுங்கள்—விசுவாசம், அன்பு மற்றும் நம்பிக்கை நிறைந்தவர்களாக இருங்கள். நீங்கள் அவருக்குச் சொந்தமானவர்கள், உங்களுக்குள் இருக்கும் அவருடைய ஜீவன் உங்களை ஒவ்வொரு நாளும் பலமுள்ளவர்களாகவும் வெற்றியுள்ளவர்களாகவும் மாற்றுகிறது.

**வேத வாசிப்பு: சங்கீதம் 82:6**

**இதை சோல்லுங்கள்**

**நான் யார் என்பதை நான் அறிவேன். நான் தேவனுடைய பிள்ளை, அவராலே பிறந்தவன். நான் தினமும் வெற்றி, ஆசீர்வாதம் மற்றும் மகிமையில் நடக்கிறேன். அல்லேலூயா!**

புதன்
14

# விசுவாசம் நிறைந்த வார்த்தைகளைப் பேசுங்கள்

## யோபு 22:28

நீர் ஒரு காரியத்தை தீர்மானித்தால், அது உமக்கு உறுதியாகும்...



வேதாகமம் உங்கள் நாவைப் பெரிய கப்பலைக் கட்டுப்படுத்தும் ஒரு சிறிய சுக்கானுக்கு ஒப்பிடுகிறது (யாக்கோபு 3:4). இதன் அர்த்தம் உங்கள் வார்த்தைகள் உங்கள் வாழ்க்கையின் திசையை வழிகாட்டுகின்றன. நீங்கள் தினமும் சொல்வது மிக முக்கியமானது.

எனவே, உங்கள் வார்த்தைகளைக் கவனமாகத் தேர்ந்தெடுங்கள். "என்னால் முடியாது" என்றோ "நான் பலவீனமாக இருக்கிறேன்" என்றோ சொல்லாதீர்கள். அதற்குப் பதிலாக, தேவனைப் பற்றி வேதாகமம் என்ன சொல்கிறதோ அதைச் சொல்லுங்கள். பலம், ஆரோக்கியம் மற்றும் வெற்றியைப் பேசுங்கள். நீங்கள் சொல்வதைப் பெறுவீர்கள் என்று இயேசு கூறினார் (மாற்கு 11:23).

உங்கள் இருதயத்தையும் வாயையும் விசுவாசத்தினாலும் ஸ்தோத்திரத்தினாலும் நிரப்புங்கள். நீங்கள் சரியான வார்த்தைகளைப் பேசும்போது, உங்கள் வாழ்க்கை சரியான திசையில் நகரத் தொடங்கும்—சமாதானம், கிருபை மற்றும் மேன்மையால் நிரம்பும்.

**வேத வாசிப்பு: மாற்கு 11:23**

**தேவனுடைய வார்த்தை என் இருதயத்திலும் என் வாயிலும் இருக்கிறது. நான் பலமும், ஞானமும், ஜீவனும் நிறைந்தவன் என்று அறிவிக்கிறேன். ஆமென்.**

**இதை சொல்லுங்கள்**

வியாழன்

15

# தேவனுடைய பார்வையில் பாருங்கள்

## 2 கொரிந்தியர் 4:18

காணப்படுகிறவைகளை அல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு... காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்.



நலமான சிறுவர் புத்தகங்களை இன்னும் கண்டறிய ஸ்கேன் செய்யுங்கள்!

உங்கள் கண்கள் காண்பதற்கு அப்பால் நீங்கள் பார்க்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். இதன் அர்த்தம் காரியங்கள் வேறு விதமாகத் தோன்றினாலும், அவருடைய வார்த்தையை நம்பி அவர் சொல்வதை விசுவாசிப்பதாகும். நீங்கள் இந்த வழியில் பார்க்கும்போது, தேவனுடைய வாக்குத்தத்தங்களில் உறுதியான நம்பிக்கையோடு இருப்பீர்கள்.

வேதாகமத்தில், யோவான் தேவனுடைய பார்வையில் பார்ப்பதற்காக "இங்கே ஏறிவா" என்று சொல்லப்பட்டார் (வெளிப்படுத்தின விசேஷம் 4:1). நீங்கள் கிறிஸ்துவுக்குள் விசேஷமானவர்கள், ஆரோக்கியமானவர்கள் மற்றும் வெற்றியுள்ளவர்கள் என்பதைக் கண்டுகொள்ள தேவனுடைய வார்த்தை உங்களுக்கு உதவுகிறது.

நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடப்போம் என்று வேதாகமம் கூறுகிறது (2 கொரிந்தியர் 5:7). எனவே, தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து அதன்படி செயல்படுங்கள், நீங்கள் தினமும் மகிழ்ச்சி, வெற்றி மற்றும் சமாதானத்தில் வாழ்வீர்கள்.

**வேத வாசிப்பு: ஆதியாகமம் 13:14-15**

**ஜெபிப்போம்**

கிருபையுள்ள பிதாவே, உமது வார்த்தைக்காக உமக்கு நன்றி. என்னைச் சுற்றி என்ன நடந்தாலும், கிறிஸ்துவுக்குள் எனக்கு இருக்கும் வெற்றியையும், ஆசீர்வாதத்தையும், நல்ல வாழ்க்கையையும் நான் காண்கிறேன், இயேசுவின் நாமத்தில். ஆமென்.

வெள்ளிக்கிழமை
16

# இயேசுவின் நாமம் உங்களுடைய அதிகாரம்

## யோவான் 14:13

நீங்கள் என் நாமத்தினாலே எதைக்கேட்பீர்களோ, அதை நான் செய்வேன்...



இயேசுவின் நாமம் சாதாரணமானது அல்ல. அது உங்களுடைய அதிகாரமாகும். நீங்கள் இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்தும்போது, இயேசுவே பேசுவது போலாகும். எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை தேவன் இயேசுவுக்குத் தந்தருளினார் என்று வேதாகமம் கூறுகிறது (பிலிப்பியர் 2:9-11). இதன் அர்த்தம் எல்லாமே அவருடைய நாமத்திற்குக் கீழ்ப்படிகிறது என்பதாகும்.

வேதாகமத்தில், பேதுரு "...இயேசுவின் நாமத்தினாலே... எழுந்து நட" என்று கூறியபோது, அந்த மனிதன் குணமடைந்தான் (அப்போஸ்தலர் 3:6-8). அதே வல்லமை உங்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது!

நீங்கள் ஜெபிக்கும்போதோ, கடினமான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும்போதோ அல்லது எந்த உதவி தேவைப்படும்போதோ இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்தலாம். அவருடைய நாமம் கிரியை செய்யும் என்பதை அறிந்து, விசுவாசத்துடனும் தைரியத்துடனும் அதைச் சொல்லுங்கள்.

நினைவில் வையுங்கள், இயேசுவின் நாமத்தின் மூலம் உங்களுக்கு ஒவ்வொரு நாளும் வெற்றி உண்டு.

நலமான சிறுவர் புத்தகங்களை இன்னும் கண்டறிய ஸ்கேன் செய்யுங்கள்!

**வேத வாசிப்பு: மாற்கு 16:17-18**

**ஜெபிப்போம்**

அன்பான பிதாவே, இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்துவதற்கான அதிகாரத்தை எனக்குத் தந்ததற்காக உமக்கு நன்றி. நான் வாழ்ந்து இந்த நாமத்தைப் பயன்படுத்தும்போது, எனக்குள்ளும் என்னைச் சுற்றிலும் மாற்றங்களைக் காண்கிறேன், இயேசுவின் நாமத்தில். ஆமென்.

சனிக்கிழமை

17

# பரிசுத்த ஆவியானவர் உங்களுடனே இருக்கிறார்

## 2 கொரிந்தியர் 13:14

...பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக. ஆமென்.



பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு விசேஷமான உதவியாளரும் நண்பருமாய் இருக்கிறார். அவர் உங்களுக்குள் வாழ்கிறார், எப்போதும் உங்களுடனே இருக்கிறார். இதன் அர்த்தம் நீங்கள் ஒருபோதும் தனியாக இல்லை! இயேசு பரலோகத்திற்குச் சென்றார், ஆனால் அவர் தினமும் நம்மோடு இருக்கும்படி பரிசுத்த ஆவியானவரை அனுப்பினார். தேவனைப் பற்றி அறியவும், சரியானதை உங்களுக்குக் கற்றுத்தரவும், தேவன் விரும்பும் வழியில் வாழ உங்களுக்கு வல்லமை அளிக்கவும் பரிசுத்த ஆவியானவர் உதவுகிறார். அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருந்ததால் பெரிய காரியங்களைச் செய்தார்கள். அவர் அவர்களை வழிநடத்தி அவர்களுக்குத் தைரியத்தைத் தந்தார்.

எனவே, அவர் உங்களுடனே இருக்கிறார் என்பதை எப்போதும் நினைவில் வையுங்கள்: பள்ளியிலும், வீட்டிலும், நீங்கள் இருக்கும் எல்லா இடங்களிலும். அவருடன் இணைந்து நீங்கள் மகிழ்ச்சியாய் வாழவும், பெரிய காரியங்களைச் செய்யவும், தினமும் தேவனைப் பிரியப்படுத்தவும் முடியும்.

நலமான சிறுவர் புத்தகங்களை இன்னும் கண்டறிய ஸ்கேன் செய்யுங்கள்!

**வேத வாசிப்பு: யோவான் 15:26**

**இதை சொல்லுங்கள்**

பரிசுத்த ஆவியானவர் எனக்குள்ளும் என்னுடனும் இருக்கிறார்; எனவே, நான் ஒருபோதும் தனியாக இல்லை. சிறந்த வாழ்க்கை வாழ எனக்குத் தேவையான எனது உதவியாளராகவும், தேற்றரவாளனாகவும், எல்லாவற்றுமாகவும் அவர் இருக்கிறார். அல்லேலூயா!

ஞாயிறு

18

# தேவனுடைய அன்பைத் தைரியமாகப் பகிருங்கள்

## 2 கொரிந்தியர் 5:18

...இயேசு கிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்குத் தந்தருளினார்.



மற்றவர்கள் தேவனைப் பற்றி அறிந்துகொள்ள உதவுவதற்கு தேவன் உங்களுக்கு ஒரு விசேஷமான பணியைத் தந்திருக்கிறார். இது ஒப்புரவாக்குதலின் ஊழியம் என்று அழைக்கப்படுகிறது. மக்கள் தேவனுடைய அன்பைப் பெற்று அவருடைய பிள்ளைகளாக மாறுவதற்காக அவர்களிடம் இயேசுவைப் பற்றிச் சொல்வதுதான் இதன் அர்த்தம்.

வேதாகமத்தில், அப்போஸ்தலர்கள் இயேசுவைப் பற்றித் தைரியமாகப் பேசினார்கள் (அப்போஸ்தலர் 4:31). சூழ்நிலை கடினமாகத் தோன்றியபோதும் அவர்கள் நிறுத்தவில்லை. அவர்கள் நற்செய்தியை எல்லா இடங்களிலும் பகிர்ந்தார்கள், அநேக மக்கள் விசுவாசித்தார்கள்.

நீங்களும் அதையே செய்யலாம். உங்கள் நண்பர்களிடமும், சக மாணவர்களிடமும், குடும்பத்தினரிடமும் இயேசுவைப் பற்றிச் சொல்லுங்கள். வெட்கப்படவோ பயப்படவோ வேண்டாம்—தேவன் உங்களுடன் இருக்கிறார். நீங்கள் அவருடைய வார்த்தையைப் பகிரும்போது, அவருடைய அன்பைக் காண்பித்து, மற்றவர்கள் அவரிடம் வர உதவுகிறீர்கள்.

நலமான சிறுவர் புத்தகங்களை இன்னும் கண்டறிய ஸ்கேன் செய்யுங்கள்!

**வேத வாசிப்பு: அப்போஸ்தலர் 14:1**

**ஜெபிப்போம்**

அன்பான பிதாவே, உமது அன்பைப் பகிர்ந்துகொள்ளும் பாக்கியத்தை எனக்குத் தந்ததற்காக உமக்கு நன்றி. நான் இயேசுவைப் பற்றிப் பேசும்போது, இருதயங்கள் திறக்கப்பட்டு, அநேகர் உமது அன்பை மகிழ்ச்சியோடு பெற்றுக்கொள்கிறார்கள், இயேசுவின் நாமத்தில். ஆமென்.

திங்கள்

19

# நீங்கள் ஒரு ராஜரீக ஆசாரியன்

## வெளிப்படுத்தின விசேஷம் 5:10

...நம்முடைய தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம்...



நீங்கள் ஒரு ஆசாரியன் என்று வேதாகமம் கூறுகிறது. இதன் அர்த்தம் நீங்கள் தேவனுக்குச் சொந்தமானவர்கள் மற்றும் அவருக்கு ஊழியம் செய்வதில் ஒரு விசேஷமான பங்கைக் கொண்டுள்ளீர்கள் என்பதாகும். நீங்கள் பெரியவராகும் வரை காத்திருக்க வேண்டியதில்லை—இப்போதே தேவனுக்கு ஊழியம் செய்யலாம்.

தேவனுடைய பிள்ளையாக, நீங்கள் மற்றவர்களுக்காக ஜெபிக்கலாம், தேவனுடைய வார்த்தையைப் பகிரலாம், உங்கள் வார்த்தைகளால் அவரைத் துதிக்கலாம். தேவன் நம்மைத் தேவனுக்கு முன்பாக ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கியிருக்கிறார் என்பதை எப்போதும் நினைவில் வையுங்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 1:6). இதன் அர்த்தம் மற்றவர்கள் தேவனை அறிந்துகொள்ள உதவவும், தினமும் அவருடைய அன்பைக் காண்பிக்கவும் உங்களால் முடியும் என்பதாகும். எனவே, எப்போதும் ஜெபியுங்கள், அவருடைய வார்த்தையைப் பேசுங்கள், அவரைத் துதியுங்கள். உங்கள் உலகத்தில் நீங்கள் தேவனுடைய பிரதிநிதியாக இருக்கிறீர்கள்!

**வேத வாசிப்பு: 1 பேதுரு 2:9-10**

**ஜெபிப்போம்**

**அன்புள்ள பரலோகப் பிதாவே, என்னைத் தேர்ந்தெடுத்து என்னை ஒரு ராஜரீக ஆசாரியனாக மாற்றியதற்காக உமக்கு நன்றி. நான் செல்லும் இடமெல்லாம் உமது அன்பைக் காண்பித்து, உமது வார்த்தையைப் பேசுகிறேன், இயேசுவின் நாமத்தில். ஆமென்.**

செவ்வாய்
20

# நீங்கள் வெற்றி பெற பிறந்தவர்கள்

1 யோவான் 5:4

தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்...



தேவனுடைய பிள்ளையாக, நீங்கள் வெற்றி பெறவே பிறந்திருக்கிறீர்கள். உங்களைச் சுற்றி என்ன நடந்தாலும், பயத்திற்கும் துன்பத்திற்கும் மேலாக நீங்கள் வாழ முடியும்; ஏனெனில் நீங்கள் இயேசுவுக்குச் சொந்தமானவர்கள், அவருடைய வெற்றியில் பங்குள்ளவர்கள்.

பிசாசினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்வதற்கு உங்களுக்கு அதிகாரம் அளித்திருப்பதாகவும், ஒன்றும் உங்களை சேதப்படுத்தாது என்றும் இயேசு கூறியிருக்கிறார் (லூக்கா 10:19). இந்தச் சத்தியத்தை உங்கள் இருதயத்திலும் மனதிலும் வையுங்கள்.

எனவே பயத்தைத் தேர்ந்தெடுக்காமல் விசுவாசத்தைத் தேர்ந்தெடுங்கள். தேவனுடைய வார்த்தையைப் பேசி அதன்படி செயல்படுங்கள். தேவன் உங்களுடன் இருப்பதால் நீங்கள் பாதுகாப்பாகவும், நலமாகவும், தினமும் வெற்றியுள்ளவர்களாகவும் இருக்கிறீர்கள் என்பதை நினைவில் வையுங்கள்.

**வேத வாசிப்பு: 1 யோவான் 4:4**

**இதை சொல்லுங்கள்**

**என் வாழ்க்கை தேவனுடைய மகிமையினாலும் நன்மைத்தனத்தினாலும் நிறைந்திருக்கிறது. நான் அவருடைய வார்த்தையின்படி வாழ்கிறேன், மேலும் பயம், வியாதி மற்றும் அனைத்து சவால்களையும் மேற்கொண்டு வெற்றியில் நடக்கிறேன். ஆமென்.**

புதன்
21

# எப்போதும் தீர்க்கதரிசனம் சொல்லுங்கள்

## 1 கொரிந்தியர் 14:31

எல்லாரும் கற்றுக்கொள்ளத்தக்கதாகவும், எல்லாரும் ஆறுதலடையத்தக்கதாகவும், நீங்கள் எல்லாரும் ஒருவரன்பின் ஒருவராகத் தீர்க்கதரிசனஞ்சொல்லலாம்.



தீர்க்கதரிசனம் சொல்வது என்றால் தேவனிடமிருந்து வரும் வார்த்தைகளைப் பேசுவதாகும்; அது ஆறுதலையும், பலத்தையும், ஜீவனையும் கொண்டுவரும். நீங்கள் தேவனுடைய வார்த்தையைப் பேசும்போது, மற்றவர்களைக் கட்டியெழுப்பி, அவர்களுடைய விசுவாசம் வளர உதவுகிறீர்கள்.

உதாரணமாக, நீங்கள், "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்" என்று சொல்லலாம் (சங்கீதம் 23:1). நீங்கள் இப்படிப் பேசும்போது, தேவன் உங்களைப் பராமரிக்கிறார் என்பதை உங்களுக்கும் மற்றவர்களுக்கும் நினைவூட்டுகிறீர்கள்.

நாம் மற்றவர்களை ஆசீர்வதிக்கும்படி தீர்க்கதரிசனம் சொல்ல ஆசைப்பட வேண்டும் என்று வேதாகமம் சொல்கிறது (1 கொரிந்தியர் 14:1). எனவே, உங்கள் ஆரோக்கியம், உங்கள் படிப்பு மற்றும் உங்கள் எதிர்காலத்தைக் குறித்து—உங்கள் வாழ்க்கையின் மேல் விசுவாசத்தின் வார்த்தைகளைப் பேசுங்கள். தேவனுடைய வார்த்தையின் மூலம், உங்களைச் சுற்றியுள்ள அனைவருக்கும் மகிழ்ச்சியையும் ஆறுதலையும் கொண்டுவர முடியும்.

**வேத வாசிப்பு: 1 கொரிந்தியர் 14:31**

### ஜெபிப்போம்

**உண்மையுள்ள பிதாவே, என் இருதயத்தில் இருக்கும் உமது வார்த்தைக்காக உமக்கு நன்றி. ஜீவனையும், பலத்தையும், ஆறுதலையும் கொண்டுவரும் வார்த்தைகளை நான் பேசுகிறேன், மேலும் தினமும் ஞானத்தில் வளர்கிறேன், இயேசுவின் நாமத்தில். ஆமென்.**

வியாழன்
22

# தேவனுடைய திட்டம்

## கொலோசெயர் 3:23

"நீங்கள் எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கு என்று செய்யாமல், கர்த்தருக்கு என்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்."



தேவன் உங்கள் வாழ்க்கைக்கு ஒரு விசேஷமான திட்டத்தை வைத்திருக்கிறார். அவருடைய வார்த்தையை நீங்கள் படிக்கும்போது, நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று அவர் விரும்புகிறார் என்பதை அறிந்துகொள்வீர்கள். ஆனால் கவலைகள், விளையாட்டுகள் அல்லது முக்கியமில்லாத காரியங்கள் போன்ற கவனச்சிதறல்கள் உங்கள் கவனத்தைத் திருப்பிவிடக்கூடும். அதனால்தான் நீங்கள் அவர்மேல் கவனமாக இருக்க வேண்டும்.

தேவனுடைய கிரியைகளைச் செய்து அதை முடிப்பதே தம்முடைய இலக்கு என்று இயேசு கூறினார் (யோவான் 4:34). பவுலும் என்ன நடந்தாலும் பொருட்படுத்தாமல் தொடர்ந்து முன்னேறினார் (பிலிப்பியர் 3:13-14). அவர்கள் விட்டுக்கொடுக்கவில்லை.

எனவே தேவன் உங்களுக்குச் செய்யக் கொடுக்கும் காரியத்தில் உண்மையாயிருங்கள். அதை முழு இருதயத்தோடு செய்யுங்கள். கவனமாக இருங்கள், நன்றாய் முடித்து, தினமும் தேவனைப் பிரியப்படுத்துங்கள்.

**வேத வாசிப்பு: 2 தீமோத்தேயு 4:7**

**ஜெபிப்போம்**

**அன்புள்ள பரலோகப் பிதாவே, என் வாழ்க்கையைக் குறித்த உமது திட்டத்திற்காக உமக்கு நன்றி. நான் உம்மீது கவனமாக இருந்து, நீர் எனக்குச் சொன்னதைச் செய்கிறேன், இயேசுவின் நாமத்தில். ஆமென்.**

வெள்ளிக்கிழமை

23

# தூபவர்க்கம் போன்ற உங்கள் ஜெபங்கள்

## வெளிப்படுத்தின விசேஷம் 5:8

...பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கத்தினால் நிறைந்த பொற்கலசங்களையும்...



நீங்கள் ஜெபிக்கும்போது பரலோகத்தில் ஒரு அழகிய காரியம் நடக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா? உங்கள் ஜெபங்கள் தேவனிடம் சுகந்த வாசனையுள்ள தூபவர்க்கத்தைப் போல எழும்புகின்றன என்று வேதாகமம் கூறுகிறது.

வேதாகமக் காலத்தில், ஆசாரியர்கள் ஆராதனையின் ஒரு பகுதியாகத் தூபத்தைக் கொளுத்தினார்கள். இன்று, தேவனுக்கு முன்பாக உங்கள் ஜெபங்கள் அந்தத் தூபத்தைப் போல இருக்கின்றன. நீங்கள் அவரோடு பேசும்போது, அவருக்கு நன்றி செலுத்தும்போது அல்லது மற்றவர்களுக்காக ஜெபிக்கும்போது, உங்கள் வார்த்தைகள் அவருக்குச் சுகந்த வாசனையாக எழும்புகின்றன.

தாவீது ராஜா இதை உணர்ந்தபோதே, "என் ஜெபம் உமக்கு முன்பாகத் தூபமாக வரக்கடவது..." என்றார் (சங்கீதம் 141:2). உங்கள் ஜெபங்களைக் கேட்கத் தேவன் விரும்புகிறார், எனவே எப்போதும் தொடர்ந்து ஜெபியுங்கள்; ஏனெனில் அவர் பதில் அளிக்கத் திட்டமிட்டிருக்கிறார். உங்கள் ஜெபங்கள் அவருக்கு மிகவும் விலையேறப்பெற்றவை.

**வேத வாசிப்பு: வெளிப்படுத்தின விசேஷம் 8:4**

**இதை சோல்லுங்கள்**

**அன்புள்ள பிதாவே, நீர் என் துதிக்கும் ஆராதனைக்கும் பாத்திரராய் இருக்கிறீர். நான் ஜெபித்து நன்றி செலுத்தும்போது, என் வார்த்தைகள் உமக்குச் சுகந்த வாசனையாக எழும்புகின்றன, இயேசுவின் நாமத்தில். ஆமென்.**

சனிக்கிழமை

24

# நீங்கள் தேவனுடைய ஸ்தானாபதி

## 2 கொரிந்தியர் 5:20

ஆனபடியினாலே, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து...



நலமான சிறுவர் புத்தகங்களை இன்னும் கண்டறிய ஸ்கேன் செய்யுங்கள்

ஒரு ஸ்தானாபதி (அம்பாசிடர்) தன் நாட்டை மற்றொரு இடத்தில் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். அதேபோல, நீங்கள் இந்த பூமியில் இயேசுவைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறீர்கள் (2 கொரிந்தியர் 5:20). இதன் அர்த்தம் நீங்கள் செல்லும் இடமெல்லாம் தேவனுடைய அன்பு, சத்தியம் மற்றும் வல்லமையைக் காண்பிக்கிறீர்கள் என்பதாகும்.

நீங்கள் தேவனுடைய வார்த்தையைப் பேசி ஜெபிக்கும்போது, பரலோகம் அதற்குப் பதிலளிக்கிறது. தேவனுடைய சித்தத்திற்கு ஏற்ப நீங்கள் அறிவிப்பது உறுதியாக்கப்படும் என்று இயேசு கூறினார் (மத்தேயு 18:18). அதாவது உங்கள் வார்த்தைகள் முக்கியத்துவம் வாய்ந்தவை.

எனவே, தேவனுடைய ஸ்தானாபதியைப்போலச் சிந்தித்துச் செயல்படுங்கள். உங்கள் வார்த்தைகள், செயல்கள் மற்றும் தேர்வுகள் தினமும் மற்றவர்களுக்கு அவருடைய வெளிச்சத்தையும் அன்பையும் காட்டட்டும்.

**வேத வாசிப்பு: ஏசாயா 32:1**

**ஜெபிப்போம்**

**அன்பான பிதாவே, என்னை உமது பிரதிநிதியாக மாற்றியதற்காக உமக்கு நன்றி. என் மூலமாக உமது ஞானம், வல்லமை மற்றும் அன்பு நான் செல்லும் இடமெல்லாம் காணப்படுகிறது, இயேசுவின் நாமத்தில். ஆமென்.**

# வேதாகமப் புதையல் வேட்டை!



**கதையை கவனமாக வாசியுங்கள். வேதாகமப் பகுதியிலிருந்து சரியான சொற்களைக் கொண்டு விடுபட்ட இடங்களை நிரப்புங்கள். உங்களுக்கு உதவ குறிப்பைப் பயன்படுத்தவும்.**

**குறிப்பு: யோவான் 6:1–14**

இயேசு ______ (கலிலேயா / யோர்தான் / நைல்) கடலின் அக்கரைக்குப் போனார். இயேசு செய்த ______ (அடையாளங்களை / ஆடைகளை / வீட்டை) திரளான ______ (ஜனங்கள் / படைவீரர்கள் / குடும்பத்தினர்) கண்டபடியால் அவருக்குப் பின்சென்றார்கள். இயேசு ஒரு ______ (மலையின்மேல் / படகில் / சாலையில்) ஏறி, தம்முடைய ______ (சீஷருடனேகூட / அயல்வாசிகளுடனேகூட / படைவீரர்களுடனேகூட) உட்கார்ந்தார். இயேசு திரளான ஜனங்களைக் கண்டு, ______ (பிலிப்புவை / பேதுருவை / யோவானை) நோக்கி, "இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே வாங்கலாம்?" என்று கேட்டார். ஒரு சிறுவனிடம் ஐந்து வாற்கோதுமை ______ (அப்பங்களும் / பழங்களும் / கற்களும்) இரண்டு சிறிய ______ (மீன்களும் / பறவைகளும் / ஆட்டுக்குட்டிகளும்) இருந்தன. இயேசு ஸ்தோத்திரம் பண்ணி, அவைகளைச் சீஷர்களுக்குப் ______ (பங்கிட்டார் / மறைத்தார் / விற்றார்). எல்லாரும் ______ (திருப்தியடையும்வரை / களைப்படையும்வரை / நோயுறும்வரை) சாப்பிட்டார்கள். அவருடைய சீஷர்கள் மீதியான துண்டுகளால் பன்னிரண்டு ______ (கூடைகள் / பெட்டிகள் / சாடிகள்) நிரப்பினார்கள். ஜனங்கள், "மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிற ______ (தீர்க்கதரிசி / ராஜா / போதகர்)" என்று சொன்னார்கள்.

# புயல் வீசும் கடல் கேள்வி!

**“நன்றியுள்ள இருதயப் பயணம்!”**



**வணக்கம், செல்லக் குழந்தைகளே! ஒவ்வொரு கேள்வியையும் கவனமாக வாசித்து, வேதாகமக் குறிப்பைப் பயன்படுத்திச் சரியான விடையை எழுதுங்கள்.**

1.இயேசு ஒரு ________ல் ஏறினார், அவருடைய சீஷர்கள் அவருக்குப் பின்சென்றார்கள்.
(a) வீட்டில் (b) படகில் (c) கப்பலில்
குறிப்பு: மத்தேயு 8:23
2.திடீரென்று கடலில் பெரிய ________ உண்டாயிற்று.
(a) புயல் (b) கொந்தளிப்பு (c) கர்ஜனை
குறிப்பு: மத்தேயு 8:24
3. புயல் வீசியபோது, இயேசு ________ இருந்தார்.
(a) ஜெபித்துக்கொண்டு (b) கதறிக்கொண்டு (c) நித்திரையாயcondition
குறிப்பு: மத்தேயு 8:24
4. சீஷர்கள் அவரை எழுப்பி, "ஆண்டவரே, எங்களை இரட்சியும், ________!" என்றார்கள்.
(a) பயப்படுகிறோம் (b) திக்கற்றவர்களாயிருக்கிறோம் (c) மடிந்துபோகிறோம்
குறிப்பு: மத்தேயு 8:25
5. இயேசு அவர்களை நோக்கி, "அற்ப விசுவாசிகளே, ஏன் ________?" என்றார்.
(a) அழுகிறீர்கள் (b) பயப்படுகிறீர்கள் (c) கதறுகிறீர்கள்
குறிப்பு: மத்தேயு 8:26
6. இயேசு எழுந்து, காற்றையும் கடலையும் ________.
(a) அதட்டினார் (b) கூப்பிட்டார் (c) புறக்கணித்தார்
குறிப்பு: மத்தேயு 8:26
7. இயேசு பேசிய பிறகு, மிகுந்த ________ உண்டாயிற்று.
(a) சத்தம் (b) அமைதல் (c) மகிழ்ச்சி
குறிப்பு: மத்தேயு 8:26
8. அந்த மனுஷர்கள் ஆச்சரியப்பட்டு, "________ம் ________ம் இவருக்குக் கீழ்ப்படிகிறதே!" என்றார்கள்.
(a) மீன்களும் பறவைகளும் (b) காற்றும் கடலும் (c) கடலும் மீன்களும்
குறிப்பு: மத்தேயு 8:27

ஞாயிறு

25

# மற்றவர்களுக்காக ஜெபியுங்கள்

## யாக்கோபு 5:16

...நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான ஜெபம் மிகவும் பலனுள்ளதாயிருக்கிறது.



தேவன் எல்லாரையும் நேசிக்கிறார், எல்லாரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார் (2 பேதுரு 3:9). அதனால்தான் நீங்கள் மற்றவர்களுக்காக—உங்கள் நண்பர்கள், சக மாணவர்கள் மற்றும் உலகம் முழுவதிலும் உள்ள குழந்தைகளுக்காக ஜெபிக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

வேதாகமத்தில், மற்றவர்கள் செவிகொடாதபோதும் எலியா தேவனுக்காக உறுதியாய் நின்றான். ஜனங்கள் தேவனிடம் திரும்புவதற்கு அவன் அவர்களை ஊக்கப்படுத்தினான் (1 இராஜாக்கள் 18:21). அவன் விட்டுக்கொடுக்கவில்லை.

நீங்களும் உங்கள் வழியில் அதையே செய்யலாம். உங்கள் நண்பர்களுக்காக ஜெபியுங்கள், அவர்களிடம் தயவைக் காண்பியுங்கள், இயேசுவைப் பற்றி அவர்களிடம் சொல்லுங்கள். நீங்கள் இதைச் செய்யும்போது, மற்றவர்கள் தேவனை அறிந்துகொள்ளவும் அவருடைய அன்பைப் பெற்றுக்கொள்ளவும் உதவுகிறீர்கள்.

**வேத வாசிப்பு: ரோமர் 1:16**

**இதை சோல்லுங்கள்**

**நான் மற்றவர்களுக்காக ஜெபிக்கவும் தேவனுடைய அன்பைப் பகிரவும் ஆயத்தமாகவும் உற்சாகமாகவும் இருக்கிறேன். என் மூலமாக, அநேக பிள்ளைகள் இயேசுவை அறிந்துகொள்வார்கள். ஆமென்.**

திங்கள்

26

# நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்

## நீதிமொழிகள் 10:22

கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்.



தேவனுடைய பிள்ளையாக, உங்களை வித்தியாசப்படுத்துவது நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள் என்பதோ அல்லது உங்களிடம் என்ன இருக்கிறது என்பதோ அல்ல; உங்கள் வாழ்க்கையில் இருக்கும் தேவனுடைய ஆசீர்வாதமே ஆகும். இந்த ஆசீர்வாதம் நீங்கள் வெற்றிபெறவும் சிறந்து விளங்கவும் உதவுகிறது.

ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு மனிதன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, எப்போதும் வளர்ந்து கனி கொடுக்கும் மரத்தைப் போலிருக்கிறான் என்று வேதாகமம் கூறுகிறது (சங்கீதம் 1:3). நீங்கள் அப்படித்தான் இருக்கிறீர்கள்! இதன் அர்த்தம் நீங்கள் தொடர்ந்து முன்னேறி நல்ல பலன்களைத் தருவீர்கள் என்பதாகும்.

எனவே, "நான் ஆசீர்வதிக்கப்பட்டவன் (ஆசீர்வதிக்கப்பட்டவள்)!" என்று சொல்லுங்கள். அதை விசுவாசித்து தினமும் அதில் நடவுங்கள். நீங்கள் ஒரு வெற்றியிலிருந்து மற்றொரு வெற்றிக்குத் தொடர்ந்து கடந்துசெல்வீர்கள். அல்லேலூயா!

**வேத வாசிப்பு: எபேசியர் 1:3**

**ஜெபிப்போம்**

**அன்பான பிதாவே, என்னை ஆசீர்வதித்ததற்காக உமக்கு நன்றி. நான் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, எப்போதும் வளர்ந்து, வெற்றிபெற்று, நல்ல பலன்களைத் தரும் மரத்தைப் போல் இருக்கிறேன், இயேசுவின் நாமத்தில். ஆமென்.**

செவ்வாய்
27

# உங்களுக்குள் பொக்கிஷங்கள் இருக்கின்றன

## 2 கொரிந்தியர் 4:7

இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று தோன்றும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்.



உங்களுக்குள் பொக்கிஷங்கள் இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா? ஆம்! தேவனுடைய பிள்ளையாக, நல்ல காரியங்களை—ஞானம், பலம் மற்றும் பெரிய காரியங்களைச் செய்யும் திறனை அவர் உங்கள் ஆவியில் வைத்திருக்கிறார். "...இருதயத்தின் நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளைப் வெளிப்படுத்துகிறான்..." என்று இயேசு கூறினார் (மத்தேயு 12:35). இதன் அர்த்தம் வெற்றிபெற உங்களுக்குத் தேவையானவை உங்களிடம் ஏற்கனவே உள்ளன என்பதாகும்.

இந்த நல்ல பொக்கிஷங்களை நீங்கள் கிவாவே வெளியே கொண்டு வருவீர்கள்? தேவனுடைய வார்த்தையைப் படிப்பதன் மூலமும், விசுவாசிப்பதன் மூலமும், பேசுவதன் மூலமும் தான். தேவனைப் பற்றி வேதாகமம் என்ன சொல்கிறதோ அதை நீங்கள் சொல்லும்போது, அந்த நல்ல காரியங்கள் உங்கள் வாழ்க்கையில் வெளிப்படத் தொடங்கும்.

எனவே எப்போதும், "நான் பலமுள்ளவன் (பலமுள்ளவள்), நான் ஞானமுள்ளவன் (ஞானமுள்ளவள்), நான் ஆசீர்வதிக்கப்பட்டவன்!" என்று அறிக்கை செய்யுங்கள்.

நலமான சிறுவர் புத்தகங்களை இன்னும் கண்டறிய ஸ்கேன் செய்யுங்கள்!

**வேத வாசிப்பு: சங்கீதம் 87:3**

**இதை சோல்லுங்கள்**

**எனக்குள் பொக்கிஷங்கள் இருக்கின்றன. நான் ஞானமும் பலமும் நிறைந்தவன் (நிறைந்தவள்). தேவனுடைய ஜீவனும் மகிமையும் ஒவ்வொரு நாளும் எனக்குள் கிரியை செய்கிறது. தேவனுக்கே மகிமை!**

புதன் 28

# மகிழ்ச்சியால் நிறைந்திருங்கள்

## ரோமர் 14:17

தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது.



நீங்கள் எப்போதும் மகிழ்ச்சியால் நிறைந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேவனுடைய பிள்ளையாக, மகிழ்ச்சி என்பது கிறிஸ்துவுக்குள் இருக்கும் உங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியாகும்—அது ஏற்கனவே உங்களுக்குள் இருக்கிறது. காரியங்கள் நீங்கள் எதிர்பார்த்தபடி நடக்காதபோதும், துக்கத்திற்கோ கோபத்திற்கோ இடங்கொடாதீர்கள்; மகிழ்ச்சியைத் தேர்ந்தெடுங்கள் (யாக்கோபு 1:2).

பவுலையும் சீலாவையும் பற்றி யோசித்துப் பாருங்கள். அவர்கள் சிறைச்சாலையில் இருந்தார்கள், இருப்பினும் அவர்கள் பாடி தேவனைத் துதித்தார்கள்; ஏனெனில் அவர்களுடைய மகிழ்ச்சி அவர்களின் சூழ்நிலையைச் சார்ந்திருக்கவில்லை (அப்போஸ்தலர் 16:25–26).

எனவே உங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்துங்கள்! தினமும் புன்னகையுங்கள், பாடுங்கள், தேவனுக்கு நன்றி செலுத்துங்கள். நீங்கள் எவ்வளவு அதிகமாக மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறீர்களோ, அவ்வளவு அதிகமாக மகிழ்ச்சியடைவீர்கள்.

**வேத வாசிப்பு: 1 பேதுரு 1:8**

**இதை சொல்லுங்கள்**

**என்ன நடந்தாலும், நான் மகிழ்ச்சியால் நிறைந்திருக்கிறேன். நான் சந்தோஷமாக இருக்கிறேன், தினமும் தேவனுடைய நன்மைத்தனத்தில் வாழ்கிறேன். அல்லேலூயா!**

வியாழன்

29

# தேவனுடைய எண்ணங்களைச் சிந்தியுங்கள்

## பிலிப்பியர் 4:8

...சகோதரரே, உண்மையுள்ளவைகளோ, கண்ணியமுள்ளவைகளோ, நீதியுள்ளவைகளோ, கற்புள்ளவைகளோ, அன்புள்ளவைகளோ... அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்.



நீங்கள் மேன்மையான மற்றும் நேர்மறையான எண்ணங்களைச் சிந்திக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். நீங்கள் எதைச் சிந்திக்கிறீர்கள் என்பது மிகவும் முக்கியமானது. நீங்கள் சரியான எண்ணங்களைச்ந்திக்கும்போது, உங்கள் வாழ்க்கை சரியான திசையில் செல்கிறது.

ஆபிரகாமிடம் நட்சத்திரங்களைப் பார்க்கச் சொன்னபோது தேவன் இதை அவனுக்குக் காண்பித்தார் (ஆதியாகமம் 15:5). தேவனுடைய வார்த்தை நடப்பதற்கு முன்பே அதை விசுவாசிக்க ஆபிரகாம் கற்றுக்கொண்டான். அதேபோல, சிறந்து விளங்குவதைப் பற்றியும், வளர்வதைப் பற்றியும், தேவன் உங்களை யார் என்று சொல்கிறாரோ அவ்வாறே மாறுவதைப் பற்றியும் சிந்தியுங்கள்.

சிறிய எண்ணங்களைச் சிந்திக்காதீர்கள். ஒவ்வொரு நாளும் உங்கள் மனதை தேவனுடைய வார்த்தையினால் நிரப்புங்கள். உங்களைத் தைரியமுள்ளவர்களாகவும், புத்திசாலிகளாகவும், வெற்றியுள்ளவர்களாகவும் காணுங்கள்.

**வேத வாசிப்பு: ரோமர் 12:2**

**நான் கிறிஸ்துவின் சிந்தையைக் கொண்டிருக்கிறேன். நான் சரியான எண்ணங்களைச் சிந்திக்கிறேன், தினமும் சிறந்து விளங்குவதைக் காண்கிறேன். அல்லேலூயா!**

**இதை சோல்லுங்கள்**

வெள்ளிக்கிழமை

# கிறிஸ்து உங்களுக்குள் வாழ்கிறார்

## கொலோசெயர் 1:27

...மகிமையின் நம்பிக்கையாகிய கிறிஸ்து உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்.



நீங்கள் இயேசுவை உங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொண்டபோது, ஜீவனுக்கும் தேவபக்திக்கும் தேவையான எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டீர்கள். கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறார் என்றால் தேவனுடைய ஜீவன், ஞானம், பலம், மகிழ்ச்சி மற்றும் வெற்றி இப்போது உங்களுக்குள் இருக்கிறது என்று அர்த்தம்.

இயேசு தூரத்திலிருந்து உங்களுக்கு ஆசீர்வாதங்களைத் தரவில்லை—அவர் தன்னையே உங்களுக்குத் தந்தார். அவர் உங்களுக்குள் வாழ்வதால், நீங்கள் வெறுமையானவர்களோ அல்லது எந்த நன்மையும் இல்லாதவர்களோ அல்ல.

எனவே, உங்களிடம் எதுவும் இல்லாதது போல் பேசாதீர்கள். தேவனுடைய வார்த்தையைத் தைரியத்துடன் பேசுங்கள். கிறிஸ்துவுக்குள் உங்களுக்குச் சமாதானம், ஆரோக்கியம், தைரியம் மற்றும் தினமும் ஒரு மகிழ்ச்சியான, வெற்றியுள்ள வாழ்க்கையை வாழத் தேவையான அனைத்தும் உள்ளன.

**வேத வாசிப்பு: 2 பேதுரு 1:3**

**ஜெபிப்போம்**

**அன்புள்ள பரலோகப் பிதாவே, கிறிஸ்துவுக்குள் எனக்குத் தேவையான எல்லாவற்றையும் தந்ததற்காக உமக்கு நன்றி. நான் தினமும் ஒரு மகிமையான மற்றும் அழகிய வாழ்க்கையை வாழ்கிறேன், இயேசுவின் நாமத்தில். ஆமென்.**

சனிக்கிழமை

31

# நீங்கள் தேவனுடைய ஆலயம்

## 1 கொரிந்தியர் 3:16

நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?



தேவனுடைய பிள்ளையாக, நீங்கள் எப்போதும் அவருடைய சமூகத்தில் இருக்கிறீர்கள்; ஏனெனில் பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் வாழ்கிறார். அவரை அனுபவிக்க நீங்கள் ஆலயத்தில் இருக்கும் வரை காத்திருக்க வேண்டியதில்லை—நீங்கள் செல்லும் இடமெல்லாம் அவருடைய சமூகத்தைச் சுமந்து செல்கிறீர்கள். அதனால்தான் நீங்கள் தினமும் மகிழ்ச்சியாகவும், அமைதியாகவும், தன்னம்பிக்கையுடனும் இருக்க முடியும்.

நீங்கள் மறுபடியும் பிறந்தபோது, தேவன் உங்கள் இருதயத்தைத் தம்முடைய வீடாக மாற்றினார். பரிசுத்த ஆவியானவர் என்றென்றும் உங்களுக்குள் வாழ்வார் என்று இயேசு கூறினார் (யோவான் 14:16–17). இதன் அர்த்தம் நீங்கள் ஒருபோதும் தனியாக இல்லை—வீட்டிலும், பள்ளியிலும், நீங்கள் இருக்கும் எல்லா இடங்களிலும் தேவன் உங்களுடன் இருக்கிறார்.

எனவே நீங்கள் யார் என்பதை எப்போதும் நினைவில் வையுங்கள். தினமும் மகிழ்ச்சி, தைரியம் மற்றும் சமாதானத்தோடு வாழுங்கள்.

**வேத வாசிப்பு: 2 கொரிந்தியர் 6:16**

**அன்புள்ள பரலோகப் பிதாவே, என்னை உமது வீடாக மாற்றியதற்காக உமக்கு நன்றி. நீர் எனக்குள் உயிருள்ளவராகவும் கிரியை செய்கிறவராகவும் இருக்கிறீர். நான் செல்லும் இடமெல்லாம் உமது சமூகத்தைச் சுமந்து செல்கிறேன், இயேசுவின் நாமத்தில். ஆமென்.**

**இதை சொல்லுங்கள்**

# வேதாகமக் கேள்விகள்!



**இந்த வேதாகமக் கதாபாத்திரங்களையும் அவர்களுடைய வேலைகளையும் உங்களால் நினைவுகூர முடிகிறதா? குறிப்புகளைப் பயன்படுத்திச் சரியான விடையைக் கண்டுபிடித்து, கோடு இழுத்துப் பொருத்துங்கள்!**

| **வேதாகமக கதாபாத்திரம்** | **வேலைகள்** |
|---|---|
| **நெகேமியா –** (குறிப்பு: நெகேமியா 1:11) | ஆடு மேய்ப்பவர் மற்றும் காட்டத்திப் பழங்களைச் சேர்க்கிறவர் |
| **மத்தேயு** (குறிப்பு: மத்தேயு 9:9) | கூடாரஞ்செய்கிறவர் |
| **பவுல் –** (குறிப்பு: அப்போஸ்தலர் 18:1 -3 | வரி வசூலிப்பவர் |
| **ஆமோஸ் –** (குறிப்பு: ஆமோஸ் 7:14) | பானபாத்திரக்காரன் |

# துணுக்குகள்

## சுவிசேஷத்தைப் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியவை - பகுதி 3B

துணுக்குகளின் இந்த பதிப்பில், பயனுள்ள ஆத்தும ஆதாயத்திற்காகப் பின்பற்ற வேண்டிய ஏழு படிகளைப் பார்ப்பதன் மூலம் சுவிசேஷம் பற்றிய நம்முடைய படிப்பை நிறைவு செய்வோம்.

இது ஆர்வமூட்டுவதாகவும் உற்சாகமூட்டுவதாகவும் இருக்கும். சுவிசேஷத்தைப் பற்றியும், மற்றவர்கள் இயேசுவை அறிந்துகொள்ள நீங்கள் எவ்வாறு உதவலாம் என்பதைப் பற்றியும் அதிகமாகக் கற்றுக்கொள்வீர்கள். வாருங்கள் தொடங்குவோம்!

**<u>ஆத்தும ஆதாயத்தைச் சரியாகச் செய்வதற்கான 7 படிகள் *(சென்ற பதிப்பின் தொடர்ச்சி)*</u>**

ஆத்தும ஆதாயத்தைச் சரியான முறையில் செய்ய பரிசுத்த ஆவியானவரால் போதகர் கிறிஸ் மூலமாக நமக்கு வழங்கப்பட்ட 7 படிகள் இவை:

**<u>படி 5: அவர்களை தேவனுடைய குடும்பத்திற்குள் கொண்டு வாருங்கள் —*கொலோசெயர் 1:12-13; 1 தீமோத்தேயு 3:15*</u>**

அவர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டவுடன், தேவனுடைய குடும்பத்தில் ஒரு பகுதியாக மாறுகிறார்கள். ஒரு பிறந்த குழந்தைக்கு எவ்வாறு ஒரு வீடு தேவையோ, அதேபோல ஒரு புதிய விசுவாசிக்கு ஒரு சபை குடும்பம் தேவை.

அவர்கள் கற்றுக்கொள்ளவும், வளரவும், உற்சாகமடையவும் அவர்களைச் சபைக்கு அழைத்து வாருங்கள். அவர்கள் இப்போது தேவனுக்குச் சொந்தமானவர்கள் என்றும் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிறார்கள் என்றும் அவர்கள் தெரிந்துகொள்ள

வேண்டும். சபை அவர்களின் புதிய வாழ்க்கையில் வலுவாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க உதவுகிறது.

**படி 6: அவர்கள் சபையில் வளர உதவுங்கள் — *மத்தேயு 28:19-20***

இப்போது அவர்கள் தேவனுடைய குடும்பத்தில் இருப்பதால், அவர்கள் வளர வேண்டும். தாம் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி போதிக்க வேண்டும் என்று இயேசு கூறினார். சபையில், அவர்களுக்கு தேவனுடைய வார்த்தை போதிக்கப்பட்டு, சரியான முறையில் எப்படி வாழ்வது என்று காண்பிக்கப்படுகிறது.

அவர்கள் ஜெபிப்பார்கள், கற்றுக்கொள்வார்கள், மேலும் அவர்கள் வழிநடத்தப்பட்டு பராமரிக்கப்படும் குழுக்களில் இணைவார்கள். இது அவர்கள் புதிய விசுவாசிகளிலிருந்து பலமான மற்றும் நிலையான கிறிஸ்தவர்களாக வளர உதவுகிறது.

**படி 7: மற்றவர்களுக்கு உதவ அவர்களை ஆயத்தப்படுத்துங்கள் —*மத்தேயு 28:20***

அவர்கள் வளரும்போது, மற்றவர்களுக்கு உதவ ஆயத்தமாகிறார்கள். வளர்ச்சி பொறுப்பிற்கு வழிவகுக்கிறது. அவர்கள் பலமடையும் போது, அவர்களும் இயேசுவைப் பற்றி மற்றவர்களுக்குச் சொல்லத் தொடங்க வேண்டும்.

அவர்களாலும் ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய முடிகிற வரை நம்முடைய பணி நிறைவடைவதில்லை. இயேசு தம்முடைய சீஷர்களுக்குப் போதித்தது போல, நாமும் மற்றவர்களுக்கும் அதையே செய்யப் போதிக்கிறோம்.

**முடிவுரை**

இந்த ஏழு படிகளையும் நீங்கள் கவனமாகப் பின்பற்றினால், தேவனுடைய கிரியையைச் சிறப்பாகச் செய்து, அநேக மக்கள் இயேசுவை அறிந்துகொள்ளவும் அவருக்குள் வளரவும் உதவுவீர்கள்.

நீங்கள் இதை வெறும் கற்றுக்கொள்வது மட்டுமல்ல—இதைச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இன்றே தொடங்குங்கள், ஒரு ஆத்தும ஆதாயக்காரராக இருங்கள்!

# விடைகள்

## பக்கம் 32

## வேதாகமப் புதையல் வேட்டை!

இயேசு **கலிலேயா** கடலின் அக்கரைக்குப் போனார். இயேசு செய்த **அடையாளங்களை** திரளான **ஜனங்கள்** கண்டபடியால் அவருக்குப் பின்சென்றார்கள். இயேசு ஒரு **மலையின்மேல்** ஏறி, தம்முடைய **சீஷருடனேகூட** உட்கார்ந்தார். இயேசு திரளான ஜனங்களைக் கண்டு, **பிலிப்புவை** நோக்கி, "இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே வாங்கலாம்?" என்று கேட்டார். ஒரு சிறுவனிடம் ஐந்து வாற்கோதுமை **அப்பங்களும்** இரண்டு சிறிய **மீன்களும்** இருந்தன. இயேசு ஸ்தோத்திரம் பண்ணி, அவைகளைச் சீஷர்களுக்குப் **பங்கிட்டார்**. எல்லாரும் **திருப்தியடையும்வரை** சாப்பிட்டார்கள். அவருடைய சீஷர்கள் மீதியான துண்டுகளால் பன்னிரண்டு **கூடைகள்** நிரப்பினார்கள். ஜனங்கள், "மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிற **தீர்க்கதரிசி**" என்று சொன்னார்கள்.

# விடைகள்

## பக்கம் 33

### புயல் வீசும் கடல் கேள்வி!

1. (b) படகு

2. (b) கொந்தளிப்பு

3. (c) நித்திரையாயிருந்தார்

4. (c) மடிந்துபோகிறோம்

5. (b) பயப்படுகிறீர்கள்

6. (a) அதட்டினார்

7. (b) அமைதல்

8. (b) காற்றும், கடலும்

# விடைகள்

## பக்கம் 41

## வேதாகமக் கேள்விகள்!

| **வேதாகமக கதாபாத்திரம்** | **வேலைகள்** |
| --- | --- |
| **நெகேமியா –** (குறிப்பு: நெகேமியா 1:11) | ஆடு மேய்ப்பவர் மற்றும் காட்டத்திப் பழங்களைச் சேர்க்கிறவர் |
| **மத்தேயு** (குறிப்பு: மத்தேயு 9:9) | கூடாரஞ்செய்கிறவர் |
| **பவுல் –** (குறிப்பு: அப்போஸ்தலர் 18:1-3 | வரி வசூலிப்பவர் |
| **ஆமோஸ் –** (குறிப்பு: ஆமோஸ் 7:14) | பானபாத்திரக்காரன் |


VANISH
A RAPTURE STORY
IN A TWINKLE OF AN EYE, EVERYTHING CHANGES
NOW
AVAILABLE
THE ANIMATION MOVIE VANISH SHARES A PROFOUND STORY
OF THE END TIME, PREPARING THE HEARTS OF CHILDREN FOR ETERNITY.
BORN FROM A VISION TO REACH CHILDREN EVERYWHERE,
VANISH CARRIES A MESSAGE OF HOPE AND READINESS FOR THE RETURN OF JESUS.
ITS MISSION IS CLEAR—TO TOUCH ONE BILLION YOUNG LIVES ACROSS THE WORLD.
FOR MORE INFORMATION ON SPONSORSHIP KINDLY VISIT
www.thevanishmovie.org



# இரட்சிப்பின் ஜெபம்

இதை சொல்லுங்கள்: "அன்புள்ள தேவனே, இயேசு கிறிஸ்துவை, ஜீவனுள்ள தேவனின் குமாரனை, என் முழு இருதயத்துடன் நம்புகிறேன். அவர் எனக்காக மரித்தார் என்றும் தேவன் அவரை மரணத்திலிருந்து உயிர்ப்பித்தார் என்றும் நம்புகிறேன். இன்று முதல் இயேசு கிறிஸ்து என் வாழ்க்கையின் தேவன் என்று நான் என் வாயால் அறிக்கை செய்கிறேன். அவர் மூலமாகவும் அவரின் நாமத்தினாலும் எனக்கு நித்திய ஜீவனுண்டு. நான் மறுபடியும் பிறந்திருக்கிறேன். தேவனே, என் ஆத்துமா இரட்சிக்கப்பட்டதற்காக, நன்றி ! நான் இப்போழுது தேவனின் பிள்ளை. அல்லேலூயா!"

நல் வாழ்த்துகள்! இப்பொழுது நீங்கள் தேவனின் பிள்ளை!

ஆரம்ப வாசகர்களுக்கு பரமசத்தியத்தில் பரவசம்

## எழுத்தாளர் பற்றி

பாஸ்டர் கிறிஸ் ஓயாக்கிலோமே, லவ்வேர்ல்ட் இன்க் தலைவர், இது ஒரு ஆற்றல்மிக்க, பன்முக, உலகளாவிய அமைச்சகம். அவர் பரமசத்தியத்தில் பரவசம் என்ற உலகத்தின் முதன்மையான தின தியானம் மற்றும் 30க்கு மேலான புத்தகங்களின் நூலாசிரியராவார். தேவ வார்த்தைக்காக அர்ப்பணிக்கப்பட்ட இந்த தேவ ஊழியரின் செய்தி பலருக்கும், பிள்ளைகளுக்கும் தெய்வீக வாழ்க்கையின் எதார்த்தத்தை அவர்களின் இருதயத்திற்கு கொண்டு வந்துள்ளது.

“அட்மாஸ்பியர் போர் மிரக்கிள்ஸ்," "உங்கள் லவ் வேர்ல்ட் ஸ்பெஷல்ஸ்" மற்றும் "சுகமளிக்கும் நீரோடைகளின் நேரிலை சுகத்தின் ஆராதனை" போன்ற அவரது தொலைக்காட்சி ஒளிபரப்புகளால் பல லட்சகோடி மக்கள் தாக்கப்பட்டார்கள். அவரது தொலைக்காட்சி ஊழியத்தின் காட்சிப்பரப்பு லவ்வேர்ல்ட் செயற்கைக்கோள் தொலைக்காட்சி நெட்வொர்க்குகளுடன் உலகம் முழுவதும் பரவியுள்ளது. உலகளாவிய பார்வையாளர்களுக்கு தரமான கிறிஸ்தவ நிகழ்ச்சிகளை வழங்குகிறது.

உலகப் புகழ்பெற்ற சுகமளிக்கும் பள்ளியில், அவர் இயேசு கிறிஸ்துவின் குணப்படுத்தும் செயல்களை வெளிப்படுத்துகிறார் மற்றும் ஆவியின் வரங்களின் செயல்களால் அநேகர் சுகம் பெற உதவி செய்கிறார்.

## இந்த புத்தகத்தைப் பற்றியவை

தேவ வார்த்தையை மகிழ்ச்சியுடன் படிக்க ஆரம்ப வாசகர்களுக்கு பரமசத்தியத்தில் பரவசம் உதவுகிறது.

ஒவ்வொரு நாளுக்கான தியானமும் தேவ வார்த்தையை உற்சாகமாக வழங்குகிறது மேலும் பிள்ளைகளை தேவ வார்த்தையை கட்டமைக்கப்பட்ட வடிவத்தில் படிக்கும் ஒழுக்க முறையில் வளர்க்க உதவுகிறது. ஒவ்வொரு தியானத்தில் அவர்கள் கற்றுக்கொண்டதை நடைமுறைப்படுத்த ஒரு ஜெபம் அல்லது அறிக்கை இருக்கும்.

வேதத்தின் உண்மைகள், குறுக்கெழுத்து புதிர்கள், வெற்றிடங்களை நிரப்புதல் மற்றும் பல சுவாரசியமான அம்சங்களுடன், பிள்ளைகளின் பரமசத்தியத்தில் பரவசம் அவர்களை தேவ வார்த்தையிலும் அவர்களின் ஆவியை வளர்க்க உதவும் முழுமையான செய்முறையாகும்!

ISSN 1596-6984
9 771596 698001